சுத்தப்படுத்தி, அங்கே அவர்களுக்கு சிறப்பான வழியிலே தரிசிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அதற்கு விடையளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வினா எழுப்புகின்றேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தத் திருக்குளத்தை என்னிடத்திலும் அவர்கள் காட்டினார்கள். ஆனால், நாங்கள் பார்க்கின்ற நேரத்தில் அது நல்ல நிலையில் இருந்தது. வருகிற 9 ஆம் தேதி நானும், நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களும், அண்ணன் திரு. ஞானசேகரன், திரு. அருள் அன்பரசு போன்றவர்களெல்லாம் அங்கே செல்லவிருக்கின்றோம். அப்போது அந்தக் குளத்தைப் பார்வையிட்டு, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**137—**

**நியமனம்**

***121420—திரு. என். நன்மாறன்:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை மாநகராட்சிப் பள்ளிகளில் பட்டதாரி மற்றும் உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மதுரை மாநராட்சிப் பள்ளிகளில் 1-6-2009 அன்றைய நிலவரப்படி காலியாகவுள்ள 48 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும்*

2010 மே 4]

14 உடற்கல்வி ஆசிரியர்கள், ஆக மொத்தம் 62 பணியிடங்களை நிரப்ப உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில், காலிப் பணியிடங்களை நிரப்ப ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். இதே விடைதான் சென்ற ஆண்டும் வழங்கப்பட்டது. தேர்வு வாரியத்தில் தேவையற்ற ஒரு தாமதம் ஏற்பட்டு, அது நீண்டு கொண்டேயிருக்கிறது. 'குரு இல்லா வித்தை பாழ்' என்று சொல்லுவார்கள், மாநகராட்சிப் பள்ளிகளுடைய மாணவர்களைப் பொறுத்தவரையில், கடுமையான நெருக்கடியில் மகாபாரத காலத்து ஏகலைவனைப் போலத்தான் பயின்று வருகிறார்கள். குறிப்பாக, ஒரு மாணவன் ஐஏஎஸ் தேர்வில் வெற்றி பெற்றிருக்கிறான். ஒரு மாணவி அறிவியலுக்கான ஆசிரியையே இல்லாமல் 99 மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறாள், ஒரு பாட்டாளியினுடைய மகள். இந்தத் தேர்வு வாரியத்தினுடைய தாமதத்தைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். தேர்வு வாரியம் செய்யும் என்று விட்டுவிடாமல், தொடர் தலையீட்டின்மூலம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, தேர்வு வாரியத்தினுடைய நடவடிக்கைகளில் சிறிது தாமதம் ஏற்பட்டிருப்பது உண்மைதான். எனவே, தேர்வு வாரியத்தினுடைய அந்த நடவடிக்கைகளை இப்போது தொடர்ச்சியாக நாங்கள் ஆய்வு செய்து, பணிகளை முடுக்கிவிட்டு, இப்போது மே மாதம் 15 ஆம் தேதி வாக்கில் அங்கே சான்றிதழ் சரிபார்க்கும் பணிகள் நடைபெற இருக்கின்றன. உடற்கல்வி ஆசிரியர்களுக்கான பதிவு மூப்புப் பட்டியலும் கிண்டி வேலைவாய்ப்பு ஆணையரிடத்திலிருந்து பெறப்பட்டிருக்கிறது. மிக விரைவில் அவர் குறிப்பிட்டவாறு அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். நானே அவற்றை

மேற்பார்த்து, நிச்சயமாக மிக விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் பொறுப்பில் இருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும், பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களும் இதில் தலையிட வேண்டுமென்று தொடர்ந்து கேட்டிருந்தேன். தலையிட்டு நிறைவேற்றியதற்கு நன்றி தெரிவிக்கிறேன். இதோடு தொடர்புடைய இன்னொரு கேள்வி. தமிழ் செம்மொழி என்று ஆகியிருக்கிறது. செம்மையான மொழி என்பதால்தான் செம்மொழி என்று நாம் அழைக்கிறோம். செம்மைத் தன்மை நம்முடைய தமிழ் மாணவர்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. தமிழ்வழி பயில்பவர்கள் ஏதோ வேறு இடம் கிடைக்காததால் இதிலே கிடைத்துவிட்ட மாதிரி ஒரு ஏக்கத்தோடு இருக்கிறார்கள். ஒரு செம்மாந்த உணர்வோடு நம்முடைய மாணவர்கள் வருவதற்கு, பாடப் புத்தகத்திலும் தமிழ் மொழியினுடைய செம்மைத் தன்மையை அந்தந்தப் பிரிவுவாரியாக, தொடக்க நிலை, நடு நிலை, உயர் நிலை, மேல் நிலை என்கிற முறையில் பிரித்து, தமிழ் மொழியின் சிரிளமைத்தனத்தை விளக்கக்கூடிய முறையில் பாடத் திட்டம் அமைக்கப்படுமா, அதற்குரிய ஏற்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலே இப்போது தமிழ் உயர்தனிச் செம்மொழி என்பதைக் குறிக்கும் வகையில் பாடத் திட்டங்கள் அமையவிருக்கின்றன. ஆனால் பள்ளிகளிலே இருக்கக்கூடிய உயர் நிலை, மேல்நிலை வகுப்புகளிலே தமிழ் செம்மொழியான அந்த வரலாறு இணைக்கப்பட வேண்டுமென்கின்ற மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து வரவேற்கத்தக்க ஒரு கருத்து. இதுகுறித்து அவர் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர், அவை முன்னவர் பேராசிரியர் அவர்களிடத்திலும் சொல்லி, பேராசிரியர் அவர்களும் என்னை அழைத்து, நம்முடைய பாடப் புத்தகங்களில் எல்லாம் இப்போது புதிய பாடத் திட்டங்களை உருவாக்கக்கூடிய

2010 மே 4]

சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை பாட நூல் குழுவிற்குத் தெரிவித்து, அவர் தெரிவித்தவாறு தமிழ் மொழி செம்மொழியாக வந்திருக்கக்கூடிய வரலாற்றை மாணவர்களுக்கு எடுத்துரைக்கக்கூடிய வகையில் பாடப் புத்தகங்களில் பாடப் பகுதியை இணைக்கலாம் என்கிற கருத்தையும் அவை முன்னவர் அவர்கள் அன்றைக்கும் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த பள்ளிக் கல்வி மானியக் கோரிக்கையின்போதும் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். எனவே, அவருடைய இந்த நல்ல கருத்தை ஏற்று, அரசு இதுகுறித்த அந்த ஒரு ஆலோசனையை பாட நூல் குழுவிற்கு நிச்சயமாக வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார். (குறுக்கீடு) ஏற்கெனவே ஒரு supplementary உங்களுக்குக் கொடுத்தாகிவிட்டது.

*முற்பகல் 10-15*

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறவுள்ள இந்த நேரத்திலே, சங்க இலக்கிய நூல்களைப் பொருள் விளக்கத்தோடு மிக மலிவு விலையிலே தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தின் சார்பிலே அச்சிட்டு மக்களுக்குக் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பல பதிப்பகங்களிலே நல்ல நூல்கள், சங்கத் தமிழ் நூல்களை மலிவு விலையிலே வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, வர்த்தமான் பதிப்பகம் போன்ற பதிப்பகங்களிலெல்லாம்கூட குறைந்த விலையில் சங்கத் தமிழ் நூல்களை மக்களிடத்திலே எடுத்துச் செல்லக்கூடிய அந்தப் பணிகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் நல்ல பதிப்பகங்கள் வந்திருக்கின்றன. தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தைப் பொறுத்தமட்டில், இப்போது அவர் சொன்ன செயற்குறிப்பு ஏதும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை. எதிர்காலத்திலே அப்படி ஒரு நிலை உருவாகுமென்றால்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்தாலோசித்துக் கொண்டு, அதைக் குறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**138—**

**பாதுகாப்பு வசதி**

***119827—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி, ஜமுனாமுத்தூர், படவேடு, செண்பகத் தோப்பு, அத்திமூர், சந்தவாசல், அமிர்தி ஆகிய பகுதிகளில் மின் வேலி, குழி, தடுப்புச் சுவர், குட்டைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

போளூர் தொகுதி, ஜமுனாமுத்தூர், படவேடு, செண்பகத் தோப்பு, அத்திமூர், சந்தவாசல், அமிர்தி ஆகிய பகுதிகளில் யானைகளிடமிருந்து பொது மக்கள் மற்றும் விவசாய நிலங்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், அவையில் இல்லை. மாற்றாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியிலே வருகின்ற ஜமுனாமுத்தூர், படவேடு, செண்பகத்தோப்பு, அமிர்தி ஆகிய பகுதிகளில், தற்பொழுது காடுகளிலேயிருந்து வரக்கூடிய யானைகளினால் மக்களின் உயிருக்கு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 4 பேர் யானையின் தாக்குதலினால் இறந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கும்பொருட்டு, அந்தப் பகுதியிலே தடுப்புச் சுவர்கள், மின் வேலி அமைக்க இந்த அரசு சிறப்பு முன்னுரிமை